**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2016**

**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. காவியம் என்று பெயர்பெறும் இலக்கியங்களை எழுதுக.
2. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?
3. ஐம்பெருங்குழுவில் இடம் பெறுவோர் யார்?
4. ஆயிரம் ஓடங்களுக்குத் தலைவன் யார்?
5. திண்ணனுக்கு இறைவன் எத்தனை நாட்களில் காட்சியளித்தார்?
6. கண்ணன் எதற்காக யாரிடம் தூது சென்றான்?
7. மாங்கனி காப்பியத்தின் தலைமை மாந்தர் யார்?
8. பாரதிதாசன் எழுதிய முதல் காப்பியம் எது?
9. சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாய் விளங்கிய நூல் எது?

10. எட்டுத்தொகையில் அகநூல்கள் யாவை?

11. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?

12. தந்தையின் கடமை எது என பொன்முடியார் கூறியுள்ளார்?

13. பிசிராந்தையார் அறிவுடை நம்பிக்கு எதற்காக அறிவுரை கூறுகிறார்?

14. பதிற்றுப்பத்தில் பரணர் குறிப்பிடும் விழாக்கள் யாவை?

15. அகவன் மகள் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. புகார் நகரத்து சதுக்கப்பூதம் , நாளங்காடிப் பூதம் – இவற்றின் செயல்பாடுகளை எழுதுக.
2. சீவக, விமலையின் தந்தை கடையில் நின்ற போது நடந்ததை விவரி?
3. சகுனியின் பண்புகள் இரண்டினை எழுதுக.
4. பாஞ்சாலி செய்த சபதத்தை எழுதுக.
5. புண்ணுமிழ் குருதி – விளக்கம் தருக.
6. புறநானூறு கூறும் புலவர்களின் பண்புகளை எழுதுக.
7. மருத நிலத் தலைவி ஊடுவதற்குரிய காரணங்களை எழுதுக.
8. குறிஞ்சித்திணைக்குரிய சிறப்புகளை எழுதுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) கண்ணகி பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்ததை நாடகமாக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திண்ணப்பன் கண்ணப்பன் ஆனதை விவரிக்க.

2. (அ) கண்ணன் தூது சென்றபோது கண்ணனின் செயல்களை வில்லிபாரதம் வழி விளக்கி உரைக்க.

(அல்லது)

(ஆ) அகத்திணையில் உணரப்படும் பண்டைய பண்பாடுகள் பற்றி விளக்குக.

3. (அ) சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படை நூல்கள் பெறும் இடத்தை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) குறிஞ்சித்திணைப் பாடல்களின் சிறப்புக்களையும், இலக்கிய நயங்களையும் விளக்கி உரைக்க.